விலை ஒரு அணா. UDUMALAI BEERANGI டெலிபோன் 2597.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை R. இரங்கநாதன்

வாரப்பதிப்பு

வெடி 1.] சென்னை, சனிக்கிழமை (6-11-1948) [குண்டு 5

சமத்துவத்தின் ஆதிகுரு வேமன்ன யோகி

டாக்டர் சி. ஆர். ரெட்டி

உலக அமைதியின் நம்பிக்கை?



உலகில் இன்னும் போர்ப் புகைச்சல் பேச்சுதான்! இந்தப் புகைச்சலை தணிக்க இந்தியாவின் வழிகாட்டுதலை எதிர்பார்க்கின்றன உலக நாடுகள்: இந்தியாவின் தலைமை சாரதியாக இருக்கும் இவர், அந்த நம்பிக்கை பலன் பெற வழி செய்வாரா? ...... அல்லது ... ... ?

இப்போதைய காங்கிரஸ் ஆட்சிப்போக்கை எண்ணவே கவலை தருகிறதே!

வேமன்ன, மேற்கு ஆந்திரவட்டாரப் பாவலன். மேற்கு ஆந்திரப் பகுதி மலைநாடு, வடக்கத்தியாரின், செல்வாக்கு இங்கு தலைகாட்ட வியலாது பெருந்தடையாக நின்றன மாமலைகள். எனவே ஆரியப்பண்பு புல்லுருவிப் பூண்டுகள் இங்கே தலைகாட்ட வியலாது போயின, கருத்திலும், உணர்ச்சியிலும் அறிவிலும் தனக்குறிய இயற்கைச் செல்வத்துடன் தன்மானத் தனிமக்களாகி வாழ்ந்தனர்; வாழ்கின்றனர் இம் மலைநாட்டு முதுமக்கள். ஆரியக்கலை அடிமைத் தளையில் இவர்கள் அதிகம் அகப்பட்டது கிடையாது. மக்களின் அறிவைக்குலைத்து, தன்னுணர்வற்ற, சூத்திரப் பாவைகள் ஆக்கும், அந்த மொழி - வடமொழி - சமஸ்கிருதம்-(பல மொழிக் கூட்டு மொழி) புல்லுருவிப் பூண்டும் இங்கு அதிகம் பரவவில்லை. சமஸ்கிருத நூல்கள் இவ்வட்டாரத் தெலுங்கிலே ஊடுருவி தாய் மொழி தனக்குறிய தாய்மைத் தனிப்பண்பை, அலங்கோலமாக்கவில்லை தாய் மொழி தனக்குரிய தாய்மைத் தனிச்சிறப்புடன், அயல்மொழி வேடமின்றி திகழ்கிறது.

இந்த கலப்பற்ற பூமாதின் மடியிலே, ஒரு சிறு கிராமத்திலே பிறந்தார் வேமன்ன. உழுதுண்டு வாழும், சுதந்திர வாழ்க்கை மக்களான ரெட்டி குலத்தினர். ஆனல் வேமன்னனே சாதி இனப் பிணைப்புக் கொடுஞ்சங்கிலிகளை தகர்த்தெரிந்த சமத்துவ வாதி, ஆனல், பல் நூல்களைக் கரைத்துக் குடித்த பண்டிதரல்ல. "படிப்பாளி" என்று உலகம் குறிப்பிடுகிறதே, அந்தப் பொருளில் அந்தப் பட்டத்திற்கு உரிய வரல்லதான். ஆனல், இயற்கை அறிவு ஊற்று, சிந்தனையின் சிற்ருறு; கற்பனையின் கற்பகம், பகுத்தறிவின் பொலிவிடம்; வாழ்க்கை அனுபவ அறிவுக்களஞ்சியம். சுருங்கச்சொல்லுமிடத்து வாழ்க்கையின் இயற்கைப் பண்புகளை, பலாபலன்களை அடி, நடு, முடிகளை கண்ணுடிபோல் கண்டறிந்து, காட்டியிருப்பவர்.

இவர் பாடியுள்ள பாக்கள்: வெறும் யாப்பிலக்கண அடுக்குச்சித்திரமல்ல, சொற்சாதுரிய வித்தையல்ல. வித்துவ அகம்பாவ அணிக்கூடமல்ல. ஆனல் அனுபவ, அறிவின் அருவி; பகுத்தறிவின் பொன்னூற்று, வாழ்க்கையை வளம்பெறச்செய்யும் தூய தெளிநீர் பெருக்கு; குருட்டு நம்பிக்கை கொண்டு பகுத்தறிவு விட்ட பழக்க வழக்கங்கள், மனதை மருட்டும் கண்மூடி பக்தி, மக்களை, தலையாட்டி மாக்களாக்கும் சம்பிரதாயங்கள் என்ற, நோய்தரு பாசிகள் சுரண்டல், முள்சுள்ளிகள், முதலியவற்றை களைந்தெரியும், கானல் வெள்ளம், தன்உறுதி தன்மானம், தன்அறிவு தன்உழைப்பு என்ற ஆக்கப் பண்புகளை ஊக்குவிக்கும் உயிர் சக்தி. மக்கள் படும் அல்லல் என்ற வன்தணலை தணிக்கவந்த பாமழை. கம்ப சித்திரம் போல், பிறர் ஆக்கிய கலைக்குப் புது வேட மணிவிக்கும், கலைக்கதம்பமல்ல இது. மலையில், கண்திறந்த இயற்கை ஊற்றுப்போல், அவர் உள்ளத்திலிருந்து உதித்துத் தனிஉரிமை தனிச்சிறப்புக் கொண்டது. சரக்கும் சொந்தம், கருத்தும் சொந்தம், அமைப்பும் சொந்தம், பண்பும் சொந்தம். போக்கும் சொந்தம். சூழ்நிலையும் சொந்தம். வாழ்க்கைத் துறைபோக்குகளும், கலப்பற்ற காட்டுப் பயிர்; கிராமத்தனிச் செல்வம். உபமான உபமேயங்களும் கிராமத்துச் செல்வம்; இயற்கை மக்களின், இயற்கைப் பண்பின் இயற்கைச் செல்வப் பொலிவை முழுக்க முழுக்கக் கொண்டன. ஆரிய "மோகினி" வேடம் இதனை அண்டக் கிடையாது. மனிதரின் இயற்கை அறிவையும் ஆற்றலையும் மழுக்கடிக்கும் மதத்தின், பகுத்தறிவு விட்ட வண்டவாளங்களை சந்தி சிரிக்க வைப்பதில் இவருடைய நன்னெறிப்பாக்கள் தலைசிறந்து விளங்குகின்றன. மூடிப்போற்றும் குருட்டு பக்தி கனகமாளிகை. வெறும் குட்டிச்சுவரென உலகோர் முன் அம்பலமாக்குகிருர். மோட்ச லோகத்தை எட்டிப் பிடித்த மகாத்மாக்கள் என்று நாடகம் கட்டி ஆடி, இல்லற லோகத்தின் இன்பங்களிலே பங்குகொள்ளுபவரின் ஆஷாட பூதித்தனத்தை மேடையேற்றி சிரி சிரியென்று சிரிக்கவைக்கிருர். மோட்சம் என்ருல் கிட்டாத மாயலோகமல்ல, மனித உடலிலிருந்து விடுபடுவதுதான் "மோட்சம்" என்கிருர். தன்னைப் புணர்ந்தவன் தலைவனை புணர்வான் என்பதே இவருடைய மெய்மொழி!

ஆரியம் காட்டும் அகங்காரம்

மனிதரை மனிதர் உயர்வு தாழ்வாகக் கருதச்செய்வதும்; மற்றவரை விட தான் உயர்ந்தவன் - என்று எண்ண மிடுவதும் அகங்காரம், அகம்பாவம், தற்பெருமை. ஆரியவேதம் காட்டும் இவ்வழி, பேரின்பத்திற்கு வழி காட்டாது; மலைபோல் பெருந்தடைக் கற்களாகவும் அகழிகளாகவும் தான் இருக்குமென்கிருர்.

சைவம், பௌத்தம், லிங்காயத் வைஷ்ணவம் ஆகிய மதங்களின் உபதேசங்கள், கோட்பாடுகளின் ஆகா வழிப்போக்குகளை இவர் கடுமையாகக் கண்டிக்கிருர். ஏனென்ருல், அம்மதங்களைப் பின்பற்றுகிறவர்கள் ஒவ்வொருவரும் தம்மை மற்றவர்களிடமிருந்து தனிமைப் படுத்திக் கொள்கிருர்கள்; உயர்த்தி எண்ணிக் கொள்கிருர்கள். மேலினம் என்ற பெருமித அகபாமவத்திலே அவர்கள் "அந்தர" வாசிகளாகி, வாழ்கின்றனர். அவர்களின் பெருமையும் பெருமிதமும், உண்மைச் சிறப்பையும் பண்பையும் அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. ஆழ்ந்த ஆணிவேர் வேரூன்றிப்பாய்ந்த அடிப் பீடம் அவைகளுக்கில்லை. வெறும் வெளித்தோற்ற கற்பனை கோப்புதான். மூட நம்பிக்கையின்மீது கட்டப்பட்ட கட்டிடமே. பாசாங்கு, ஏமாற்றுதல், கற்பனை சடங்கு சம்பிரதாயங்கள், என்றவற்றின் மீது நிறுத்தப்பட்ட பந்தல் கோப்புதான். இந்தப் பண்பு

களோ, ஆத்மாவைத் தூய்மையாக்கு வதற்குப் பதிலாகப் குணத்தையும் மதிப்பையும் குறைக்கின்றன.

அவதாரமும் புரட்டே

ஆண்டவனின் அவதாரம் என்று, கூறப்படுவதும் உண்மை என்று சொல்லமுடியாது. ஏனென்றால், மதக்கோட்பாட்டின்படி ஆண்டவன் எங்கும், எப்போதும் பரந்து நிறைந்துள்ளவர் எனவே, அந்த ஆண்டவன் எங்கேயோ ஓர் இடத்தில் தனித்திருப்பதாகவும், தேவைப்பட்டபோது வெளிப்பட்டு அவதாரம் எடுப்பதாகவும் சொல்வதில் அர்த்தமோ அறிவுப்புலனோ இல்லை.

மேனாட்டிலே, குருட்டு நம்பிக்கையைச் சாடிய பகுத்தறிவு வீரர் வால்டையர். அவரோ வாதப்பிரதி வாதங்களில் காலத்தை நீட்டினார்,

நமது வேமன்ன அறிவாளியோ இந்தக்குருட்டு நம்பிக்கையை நேருக்கு நேராகச் சாடுகிறார், பகுத்தறிவு கொண்டு, இந்தக்குருட்டு பக்தி, குருட்டு நம்பிக்கை எனப்பட்டவைகளைத் துருவிப் பார்த்தால், அவைகள் வெறும் பொய்க்கற்பனை என்பது வெட்டவெளிச்சமாகிவிடும். பகுத்தறிவின் முன், குருட்டுநம்பிக்கைகள் எல்லாம் விரண்டோடிப்போகும்; தீமுன் பஞ்சுத்தூசு போல. வெறும் கேலிக்கூத்தாகி விடும் அறிவு கொண்டு அளந்து பார்க்குமிடத்து:—

“ கானக மிருகமு புவினி
கலதுலேதனுகாய
தருணீ விடிசிபோயி
தாசரதியூ
தெலிவிலேனிவாடு
தேவுடெட்லாயரா
வினுராவேமா
விஸ்வதாபி ராமா”

என்று, இந்த அவதார மகிமையை வெட்டவெளிச்சமாகி சிரி சிரி யென்று சிரிக்கிறார் வேமன்ன. அதாவது, “தன் காதலியின் பேச்சைக்கேட்டு, மதியிழந்து, பொய்மான்பின் ஓடிஅல்லலுற்றவன்—பொய்மான், கபடமான் ஏமாற்றி துன்பம் விளைக்கவந்தது என்பதை உணர்ந்து கொள்ளமுடியாதவன் எவ்விதம் தெய்வமாவான்” என்று கேட்டு, கைகொட்டி சிரிக்கிறார் இந்த பகுத்தறிவுவாதி,

யாகமும் யக்ஞமும்

சிலர் யாகமும் யக்ஞயங்களும் செய்து விட்டு தாங்கள் மற்றவர்களை விட மிக மிக உயர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டு பாமரமக்களை ஏமாற்றி நடித்துவருவது அறிந்ததே. இந்த யாகம் செய்வதற்குமுன், இந்தயாகம் செய்யும் “எஜமான்” தலையை சிரைத்துக்கொண்டு குளிக்கவேண்டியது முக்கியசடங்கு. இங்கே பாய்ச்சுகிறார் வேமன்ன தமது பகுத்தறிவு ஒளி ஈட்டியை, ஆழ. இது வெறும் ஏமாற்றுக் காற்றடைத்த துருத்தி என்பதை அம்பலமாக்குகிறார்.

“ சகலயாக முனுனு
சகல தீர்த்தம்புல
தலனு கொருக குன்ன
பலமுலேது
மந்திரஜாலமு கண்டே
மங்கிலி ஜாலமெச்சு
வினுராவேமா
விஸ்வதாபி ராம ”

யாகம் செய்பவன் அம்பட்டனிடம் முதலில் சிரைத்துக்கொண்டால் தான் தீர்த்தபலன் கிட்டும். எனவே வேத மந்திர ஜாலத்தைவிட அம்பட்டன் கை ஜாலமே மேலாகிறதே” என்கிறார்.

சமுதாய உயர்வு தாழ்வுகள், சாதி வேறுபாடுகள் ஆகியவைகள் பிறப்பை அடிப்படையாகக் கொண்டவை என்ற வாதத்தைச் சாடுவது என்! முதலாவது இந்த ஏற்றத்தாழ்வு என்பது தவறு கெடுதலானது. மற்றும் சமுதாயக்கட்டுக் கோப்பை, ஒற்றுமையை, இணைப்பைக் குலைத்து நாசமாக்குகிறது. இதனால் இனம் நாளுக்கு நாள் நசித்து, மறைந்து போகிறது. அல்லது வேற்று நாட்டு-வேறு இன; வல்லாளர்களுக்கு நம்மை கொத்தடிமை குலவடிமை ஆக்கி விடுகிறது, தலைமுறை தலைமுறையாக. இத்துடன் மற்றொரு குறைபாட்டையும் வேமன்ன சுட்டிக் காட்டுகிறார். இந்த வேறுபாடுகள் உயர்ந்தவர்களென்று கூறிக்கொள்ளுபவர் மனத்தில் அகம்பாவப் பெருமிதத்தையும், மற்றவர்கள் மனத்தில் தாழ்வு மனப்பான்மையையும் அடிமை மனப்பான்மையையும் புகுத்துவிடுகிறதென்கிறார். அகம்பாவமும், தாழ்வு மனப்பான்மையும் “ஜன்மசாபல்யத்திற்கு” (பிறப்பொழிப்பிற்கு)விரோதிகளென்று எடுத்துக் காட்டுகிறார் இவர். எவ்வித அனியாய அக்கிரமங்கள் செய்தாலும் உயர் ஜாதில் பிறந்து விட்டாலே, மோக்ஷத்தை அடைந்து விடலாமென்பது பரப்பப்பட்டிருக்கும் கோட்பாடு. இது வெறும் கற்பனை, தவறான எண்ணமென்கிறார் இவர்.

இறந்தபின் இயற்கையுடன் இயற்கையாய் (பரமாத்மா ஜீவாத்மா ஐக்கியம்) இணையவேண்டுமானால், அந்த ஜீவசக்தி தங்குமிடமான உடலில் எல்லாருடனும் வித்தியசாமின்றி அணைந்து வாழ்ந்தாகவேண்டுமென்ற மெய்யறிவை பகுத்தறிவு வாதத்துறையிலே விளக்குகிறார்.

“ ஊர்வி வாரிக்கெல்ல வக்க
கஞ்சம்புபெட்டி
பொட்டு குடிப்பு குலமு
பொலியஜேவலி
தலனுசேய்யி பெட்டி
தகனமு செப்பாரா ”
என்கிறார்

மனிதர்கள், தங்களுக்குள் ஒருவரை ஒருவர் உயர்வு தாழ்வு கற்பித்துக்கொண்டாலும் இயற்கை அமைப்பிலே, பண்பிலே பிறப்பு முறையிலே ஒரே மாதரி தானே இருக்கிறார்கள் என்று, இவர் ஆச்சரிய முறுகிறார்.

பாபதன கானேமி
பத்துடன கானேமி
யோகியன கானேமி
சொம்புலேக
எயின்ன பேருலேன வினஜடு
பணிதீரச்சு

அடிக்கடி தீர்த்தமாடுவதால் நமக்கு மோக்ஷம் கிட்டிவிடுமா? அப்படியானால் அந்தத் தீர்த்தித்தில் எப்போதும் கிடந்துவாழும் மீன் இனங்கள் என் மோக்ஷத்திற்குச் செல்லாது அந்தத் தண்ணீரிலேயே கிடக்கின்றன?

விபூதி அணிவதால் மோக்ஷம் கிடைத்துவிடுமா? அடிக்கடி குப்பைமேட்டில் புரண்டு எழும் கழுதை என் மோக்ஷத்திற்குச் செல்லவில்லை?

மாமிச உணவைவிட்டு விட்டால் மோக்ஷம் கிடைத்துவிடுமா? அப்படியானால் இலை தழைகளைத் தின்னும் ஆடு மாடுகளுக்கு என் மோக்ஷமில்லை! என்று கேட்கிறார்.

“ ஆக்குல தினேமேக
பொதுலல கேல
காக போயென்ன
காயசித்தி
யோகுலேல வெறி
போகல்ல பொதுரு”

குருட்டு நம்பிக்கையை ஒழிக்க முடியுமா?

குருட்டு நம்பிக்கையை நாமென்ன செய்ய முடியும்? பீர்க்கங்காய்க்கு கல்லைக் கட்டிக்கட்டு நிமிர்த்து விடலாம். ஆனால் நாயின் வாலுக்கு மட்டையைக் கட்டினாலும் அதை நிமிர்ந்த முடியுமா? என்கிறார்.

ஓதல கையா ராயிபொதுகு
தாதன கபட
லீலதோட வங்க லேக்க
பெருகு
குக்கதோக்க கட்ட
குதுருண சக்க”

குருட்டு நம்பிக்கை கொண்டவன் சந்தணக்கட்டை சுமந்த கழுதையைப் போல்வான்.

ஈனுடென்னி
வித்யாலனு
அப்பிய சிஞ்சின
குணுடு காகு
மொரக்கு ஜீனுடேகானி
பரிமாலமுல கர்தபமு
மொய்கன மௌனே
என்கிறார் ”

[குறிப்பு — இந்தக் கட்டுரை ஆந்திர பல்கலைக் கழகத்துணை அமைச்சர், டாக்டர். சி. ஆர். ரெட்டி, ஆங்கிலத்தில் பேசியதைத் தழுவியது.]

ஆசிரியருக்குக் கடிதங்கள்

உடுமலைப்பேட்டையில் ஒரு குடம் தண்ணீர் இரண்டணா?

பொதுமக்கள் கண் விழிப்பார்களா?

—-: (o) :—

உடுமலைப்பேட்டை 25-10-48

ஆசிரியர் அவர்களுக்கு

“ உடுமலை ” யை உலகறியச் செய்யும் ஒரு பத்திரிகை வெளிவருமென நான்கனவிலும் நினைத்ததில்லை. எவர்தான் எதிர்பார்த்திருக்கமுடியும்! ஒவ்வொரு வாரமும் எத்தனை ஆயிரம் பேர்கள் “ உடுமலை ” என்னும் சொல்லை உச்சரிக்கிறார்கள் என்பதை சற்றே நினைத்தால், என்னை நானே மறந்தவனாகிறேன். அவ்விதமே ஆனந்தம் அடைந்தாலும், அது நீடித்தபாடில்லை. அதற்கு காரணக்கள் பலப்பல. குறைகளை வாயால் சொல்லிமுடியாது; கஷ்டங்களோ அநேகம். யாருக்கு என்றாலோ இவ்வுடுமலை வாசிகளுக்கே. “ உடுமலை ” பெயரைக் கொண்டு, உடுமலைவாசி ஒருவரால் நடத்தப் படும் ஒரு பத்திரிகையின் சேவை இவ்வூராகிய உடுமலை வாசிகளுக்கு, கிடைக்க வேண்டுமென எதிர்பார்ப்பதற்கு எமக்கு உரிமை உண்டு. அந்நம்பிக்கையின் பேரிலேயே இதை எழுதத் துணிந்தேன். ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

உண்மையிலே உடுமலை நகர் இன்று ஓர் விபாபார உற்பத்திஸ்தலமாக இருந்திருக்க வேண்டும். இது பழைமையிலே பெயர் பெற்ற பெரும் வியாபார ஸ்தலம். இங்கு நிலவளமும், தொழில் வளமும், பொருளாதாரமும் ஒருங்கே அமையப் பெற்றிருக்கிறது. ஆனால் உலக ஜீவியத்திற்கு முக்கிய ஆதாரங்களில் ஒன்றாகிய நீர்வளம் மட்டும் மிக மிகத் தாழ்விலே தானிருக்கிறது. கல்வியறிவு, நாகரிகம், தொழில் வளர்ச்சி, உணவு, நூல் உற்பத்தி, வியாபாரப் பெருக்கம் ஆகியவைகளில் முதல் ஸ்தானம் வகிக்கவேண்டிய இந்நகர், இன்று தண்ணீர் பஞ்சத்தின் பெயரால் கடந்த பல ஆண்டுகளாகவே நாளுக்குநாள் உணர்ச்சியின்றி முயற்சி இல்லாமல் செயற்கையில் பின்தங்கியே செல்கிறது. இதை இந்நகர மக்கள் அறியாமலும் இல்லை. இதற்கு அடிப்படையாக கவனம் செலுத்வேண்டிய நகராட்சி சபையே இன்றுவரை தூங்கிக்கொண்டுருக்கும்பொழுது; நகர பொதுமக்களில் பெரும்பான்மையோராகிய பொருளாதாரமிழந்த ஏழைத் தொழிலாளிகள், தமக்குத் தண்ணீர் வசதி இல்லையே என்பதை மனதில் நினைத்து அங்கலாய்த்துக் கொண்டு, தண்ணீருக்கென விதிக்கப்படும் வரி ஒன்றை செலுத்துவதை விட வேறு எதைச் செய்யமுடியும்? இதை வற்புறுத்தி சிரத்தையுடன் தண்ணீர் குழாகள் கொண்டுவர முன்வருபவர்கள் இந் நகரில் இல்லாமற்போகவுமில்லை. இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் இப்பொழுது தன்னலத்தைக் கருதியோ அல்லது பல்வேறு இதர காரணங்களாலோ நீண்ட நித்திரை செய்து வருகிறார்கள். அவர்கள் தான் பட்டாதார் என்னும் மிராசுதார்கள், பெரும் வியாபாரிகள், பஞ்சாலை முதலாளிகள்; மற்றும் முனிசபல் அங்கத்தினர்களுமே ஆவா. இதுகாறும் இங்கு அங்கம் வகித்து வந்த முனிசிபல் நிர்வாகிகளில் பலரும்; பெரும்பாலும் “ மாடு யாருக்காக பலன் பட்டது ” என்ற வகையிலேயே நிர்வாகத்தை நடத்தினார்களே அன்றி பொதுநலத்தைக் கருதிற்கொண்டு நடத்தியதாகத் தோன்ற வில்லை ஆதலின் லட்சிய வாதிகளும், பணம் படைத்தவர் நிர்களும் முதலாளிகளும் முனிசிபல் அங்கத்தினர்களும் ஒன்றுறச் சேர்ந்து நகரத்தின் சார்பாக தண்ணீருக்கென நிவாரணக்கமிட்டி யொன்று கூட்டி, அதில் வசூலிக்கப்பட்ட தொகையையும் சேர்த்து அத்துடன் இங்குள்ள ஒவ்வொரு தொழிலாளியிடமும் மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய்வீதம் முறையே சேகரித்து நிவாரணக்கமிட்டியின் நிர்மாணத் திட்டத்தைத் துவக்கினால் சுமார்ஒன்று அல்லது ஒன்றரை வருடத்திற்குள் தண்ணீர்க்குழாய்கள் இந்நகரில் அமைக்கப்பெற்று, அதனால் சகல கல்வி தொழில், வியாபாரம் வருமானம் முதலிய துறைகளில் பெருகி நாளடைவில் ஓர் உன்னத நிலையை அடையும் என்பதில் சந்தேகமில்லை. மேலும் தற்போது கையாண்டுவரும் வரண்டசிக்கன முறை ஒழிந்து, குடிதண்ணீர் குடம் மொன்றுக்கு இரண்டு அணா விலை கொடுத்து வாங்கும் தொல்லையும் தொலைந்து தாராளமாக தண்ணீர் சிலவு செய்யும் செழிப்புவாய்ந்த நிலைமையும் ஏற்படலாம். ஆகையால் நகரமக்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து இதில் பங்கெடுத்துக் கொண்டு நகரை முன்னேற்றமடையும் வழியில்ஈடுபட்டு உடுமலைவாசிகள் என்றும் சிறப்புடன் வாழவேண்டுமென்பது எனது ஆவல். ‘ உடுமலைபீரங்கி அதற்கான பணியை மேற்கொள்ள வேண்டுமாறு மிகவும் கேட்டுக் கொள்கிறேன்.

R. V. K. நவநீதம்

யாருக்கு ?

டிசம்பர் முதல் அதிக ஜவுளி கிடைக்கு மென்கிறது சர்க்கார் செய்தி.

வர்த்தகர்களுக்கா எங்களுக்கா என்று கேட்கிறது சந்தேகத்துடன் சூடுண்ட பூனையான அப்பாவி பொது ஜனம்.

தோழர் காமராஜரின் ராசிபலன்?

தமிழ் ராஷ்ட்ர நாடு காங்கிரஸ் பதி தலைவர்

ஸ்ரீ திரு. காமராஜ் நாடார்ஜீ அவர்களே!

———: (o) :———

இதென்ன முகவரித் தொடக்கமே, "ஆஷ்டு குஷ்டி வேஷ்டி திஷ்டு ஒஷ்டு ஒஷ்டு" என்ற கந்தர்கோள நடையிலும், விசித்திர மணிப்பவள அடைமொழிகளையும் கொண்டிருக்கிறதே என்று தங்களுக்கு மலைப்புத் தட்டுகின்றதோ! இதில் ஒன்றும் ஆரிய வித்தையோ, இந்திரஜாலமோ இல்லை என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தாங்கள் தமிழ்த்தாயின் அரும் புதல்வர். ஆனால், கதம்ப வர்க்க, நவயுக நாகரீக மோஸ்தர் ராணியான ஹிந்தி மொழியின் காதலர்-அல்லது காதலராக ஆக்கப்பட்டவர் அல்லது ஆகவேண்டியவனுக் கட்டாயத்திற்குள்ளானவர், தலைமைப் பதவிப் பொறுப்பு மணிமுடி தங்கள் திருத்தலையில் ஏற்றப்பட்டிருப்பதால். எனவே நமஸ்தே என்ற ஹிந்தி முகமன் சொல்லும்; வணக்கம் என்ற தமிழ் முகமன் சொல்லும் இணைக்கப்பட்டுளது. நம் பாட்டன் பூட்டன் காலத்தில் "தாயைத்தூக்கி மணையில் வைத்து பூஜி, நேற்று வந்த மனைவியை விரட்டி அடுப்பு மூலையில் சேர்" என்று சொல்வார்கள். ஆனால், இது நவ நாகரிக உலகம். "கிழவியைத் தூக்கி மூலையில் போடு, மனைவியைத் தூக்கி மணையில் வைத்து பூஜி" என்பது இப்போதைய திருமந்திரமாக இருப்பதும் உலகறிவாளரான தாங்கள் அறிந்ததே. அத்துடன் தாங்கள் தாயன்பும் கொண்டவர். உலகத்தோடொட்ட ஒழுக, சதி தேவிகளுக்கும் உரிய கௌரவமளிப்பவர். எனவே தான்; தாய் மொழி அடைமொழியும் மனையாள்மொழி அடைமொழியும் தரவேண்டியதாயிற்று. இத்துடன் இப்போது நவ நாகரீகப்படி மனைவிக்கே முதவிடமாகையால் இந்தி அடைமொழி முன்னதாகவும், தாய்மொழி அடைமொழி பின்னதாகவும் வைத்திருக்கிறேன்.

தாங்கள், காங்கிரஸ் பனயானதும் தமிழ் நாட்டின் மானத்தை—கௌரவத்தைப் பல வகையிலும் காத்துவந்திருப்பது, மலை மலையாய் பெருமை தரக்கூடியதாகும். மேனாட்டுப் பத்திரிகைகளிலே "சென்னையின் குள்ள நரி" என்றும், தமிழ் நாட்டினரால், காந்தி யுக சாணக்கியரென்றும், அன்புப் பெயர்—ஆசை அடைமொழி வைத்தழைக்கப்பட்டவரும்; இப்போது தமது பேருக்கேற்ப "சக்ரவர்த்தி" ஆகியவருமான மே. த. கவர்னர் ஜெனரல், எமது மதிப்பிற்குரிய கனம் ராஜாஜி அவர்களை இந்தத் தென்னாட்டு அரசியல் அரங்கத்திலிருந்தே விரட்டி யடித்து வீராதிவீரப்பட்டம் பெற்றவர் தாங்கள். அத்துடன், இங்கிலாந்திலே, முன் காலத்திலே மன்னர்களை ஆக்கவும் நீக்கவும் வல்ல யாரோ ஒரு வீரர் இருந்தாராம். அதைப்போல் தாங்கள், சென்னை மாகாண மந்திரி சபையை ஆக்கவும் விலக்கவும் திறமையும் அதிகாரமும் சூட்சமும், கொண்ட காந்தி யுக விஸ்வநாத முதலியாராவீர்.

இத்தகைய மாவீரருக்கு தலையிறக்க மேற்பட்டால்—தோல்விப் படலம் தொடக்கமானால், எங்களுக்கு எவ்வளவு துக்கமும் ஏமாற்றமும் மனக்கலக்கமும் ஏற்படும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

சென்னை நகர சபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் பெயரால் யாரும் தேர்தலுக்கு நிற்கலாகாதெனத் தீர்மானித்தீர். இது சிறந்த ராஜ தந்திரம்—உலகறிந்த அறிவாளியின் போக்கு—தலைசிறந்த தலைவரென்பதற்கு தலைசிறந்த உதாரணம். ஏனென்றால் இப்போது காங்கிரசுக்கு ஏதோ கொஞ்சம் கெட்ட பெயர் என்று சிலர் பேசிக் கொள்கிறார்கள். இது இந்த சனியன் துணிப்பஞ்சம், உணவுப்பஞ்சம் என்ற தரிதலை அடங்காப் பிடாரிகளால் ஏற்பட்ட வீண் பழிதானே! உலகெல்லாம் தலை விரித்தாடும் சனியன் இங்கேயும் கூத்தடிக்கிறது என்று இந்த பாமரமக்களுக்கு எங்கே தெரிகிறது? நாட்டின் நல்லதும் கெட்டதும் அரசினர் தலையில் வந்து விடிவது உலகப்பண்பின் விபரீதம் தான் போலும்! பிளாக் மார்க்கெட்டுக்கு இடம் விட்டு விட்டார்களே என்று அடித்துக் கொள்வர் பணமில்லா ஏழைகள். ஐயோ பிர்லா கோஷ்டி கொழுக்க விட்டு விட்டு எங்களை வயிற்றிலடிக்கிறார்களே என்று அங்கலாய்ப்பர் சில்லரை வியாபாரிகள். இதற்குக் காரணம் அவர்களே என்று அவர்கள் மூளையில் படவில்லைபோலும். என்னமோ திண்ணையைத் தேள் கொட்ட தென்னைக்கு நெறி கட்டியது போல், எல்லாப் பழியும் ஆளும் கட்சியின் மீது சுமத்தும் விபரீதம் நேர்ந்து விட்டது. இதைக் கண்டுதான் தாங்களும் தேர்தலிலிருந்து ஒதுங்கினீர். ஆனால், யாரோ, சொல்வார் பேச்சைக் கேட்டுக் கொண்டு, கெட்ட காலத்தின் சதியால் தமிழ் நாட்டின் எல்லைக் கமிட்டி என்ற, வேடத்தில் பழைய காங்கிரஸ் "பாத்திரங்களையே" நிறுத்தியதுதான் பெரிய தவறாகப் போய்விட்டது. பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பதுபோல காங்கிரசின் 'கெட்ட' (உண்மையறியாப் பாமரரும் எதிரிகளும் கூறுவது) பெயருக்கு மேலும் களங்கத்தை யுண்டு பண்ணிவிட்டது. அப்படியிருந்தும் தாங்கள் மீண்டும் எந்த மதிமந்திரியின் தூண்டுதலாலோ, பிரஞ் சிந்திய தேர்தலிலும் கால் வைத்துக் கொண்டது தான் எங்களுக்கு மிகுந்த திகிலும், கவலையும் அளித்து. இதிலாயினும் தாங்கள் "பிட்" ஆகாமல் "வாகை" சூடி "ஜே ஹிந்த்" முழக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்தோம். இதிலும் எங்கள் பிரார்த்தனை அம்பலமாகி விட்டதே!

இத்துடன், தங்களுக்குமற்றொரு கோரிக்கை. தாழ்வும் வாழ்வும் ஒருவழி நில்லாதென யாரோ, பெரியவர்களென்பவர்கள் அபசகுனம் போல் சொல்லி வைத்துப் போய் விட்டனர். அந்த "நச்சு வாய் மொழி" தங்கள் விஷயத்தில் உண்மையாவதாகப் புலனாகிறது? தங்கள் "திருவிளையாடல்களுக்கு" இறக்கக் காலமோ என்றும் அஞ்ச வேண்டியிருக்கிறது? "நாடார்—கவுண்டர் கம்பெனி" ராசியில்லை என்றும் ஊரார் பேசிக் கொள்கின்றனரே. இதை எண்ணிப் பார்த்தாயினும் தாங்கள்; முன்னர் ராஜாஜி நடந்தது போன்றே தாங்களும் இப்போது சிறிது காலம் "அரசியல் துறவு" கொள்வது தான் புத்திசாலித்தனமாகப் படுகிறது. உலகமறிந்த தங்களுக்கு நாங்கள் அதிகம் சொல்லத்தேவையில்லை. தங்கள் சித்தமே பாக்கியம்.

தங்கள் அனுதாபி.

புதுமை மெய் மொழிகள்

கலைச்செல்வன்

தந்தை சொல் மிக்க மந்திர மில்லை
என்பர், குழந்தைப் பருவத்தில்.

தந்தை சொல் மிக்க தொந்தரவென்பர்
வாலிபராகி

தந்தை சொல் கேட்பார் இல்லையே
என்று ஏங்குவர் கிழவராகி.

• • • • •

காசு என்கிறான் குழந்தையில்.
காசா என்கிறான் தந்தையாகி.
காசே என்று ஏங்குகிறான் கிழவனாகி.

• • • • •

பொய் சொன்ன வாய்க்கு போஜனம்
கிடையாதென்று சொல்லித்தருகிறார்
உபாத்தியாயர்.

பொய்சொன்னவாய்க்குத்தான் போஜ
னம் கிடைக்குமென்கின்றனர் புரோ
கிதரும் பிச்சைக்காரரும்.

பொய் சொன்ன வாய்க்குத்தான் லாபம்
கிடைக்கும் என்கிறார் வியாபாரியும்,
வக்கீலும்.

பொய் சொன்ன வாய்க்குத்தான் விடு
தலை கிடைக்கு மென்கிறான் குற்ற
வாளி.

• • • • •

பிழைக்கவைப்பது புரட்டு,
உழைக்கவைப்பது உண்மை
விரட்டத் தெரிந்தவன் வீரன்
பிரட்டத் தெரிந்தவன் பிரபு
திரட்டத் தெரிந்தவன் தலைவன்
அரட்டை தெரிந்தவன் அறிவாளி
கெடுக்கத் தெரிந்தவன் கெட்டிக்
[காரன்

• • • • •

பட்டையணிந்தவன் பக்திமான்
சட்டையணிந்தவன் புத்திமான்

• • • • •

பக்தனுக்கு பக்தி பேரின்பம்
பூசாரிக்கு பக்தி பெறும் இன்பம்.

• • • • •

மனிதரின் காதல் விளையாட்டுகளை
வர்ணிப்பவன் காமுகன்
கடவுளவதாரக் காதல் விளையாட்டு
களை வர்ணிப்பவன் பக்திமான்

• • • • •

ஏழைக்குத்தருவது பிச்சை
புரோகிதனுக்குத் தருவது காணிக்
[கை
உத்தியோகஸ்தருக்குத் தருவது
லஞ்சம்
அரசனுக்குத் தருவது கப்பம்
தலைவருக்குத் தருவது பணமுடிப்பு
நண்பருக்குத் தருவது அன்பளிப்பு
உறவினருக்குத் தருவது மொய்க்
[காசு

• • • • •

பாட்டாளி பெறுவது கூலி
படிப்பாளி பெறுவது சம்பளம்
பணக்காரன் பெறுவது ஊதியம்

• • • • •

பெண்ணுக்காக ஏங்குகிறான் குமர
[னாகி

பெண்ணால் ஏங்குகிறான் குடும்பஸ்த
[னாகி

• • • • •

தாயாகக் கொஞ்சி விளையாடுகிறாள் மணமுண்ட மணவாளனுடன். பின்னர், தாயாகிக் கொஞ்சி விளையாடுகிறாள் மனம் குளிர்ந்து மகனுடன். அந்த மகன் வயது வந்து மற்றொரு மங்கையுடன் கொஞ்சி விளையாடுகையிலே ஏதோ ஒன்றை இழந்தது போல் மனம் பொறுமுகின்றனர் சில தாய்மார். அந்தப் பொறுமல் தணிந்து விடுமாம் பேரன்பேத்திகளைச் சீராட்டித் தாலாட்டி விளையாடுகையில்.

———: (x) :———

தந்தி:- "மம்மா" டெலிபோன்:- 4749.

ஏ. எம். அப்துல் காதர் மரைக்காயர்,

இரும்பு வியாபாரம், பௌண்டரி
சப்ளை கன்ட்ரேக்டர், விவசாய கருவிகள்
உற்பத்தியாளர்

70 B. ஹாரீஸ் ரோடு

புதுப்பேட்டை, மௌண்ட் ரோடு சென்னை 2.

பிரேன்ச் அண்டு வொர்க்ஷாப்

2-22. பழைய ஆட்டுத்தொட்டித் தெரு:

இராயபுரம், சென்னை.

கட்டிடங்களுக்கும், லாடங்கள் தயாரிப்பதற்கும் இன்னும்
இதர எல்லா வேலைகளுக்கும் உதவக் கூடிய
பழைய இரும்பு சாமான்களும் கிடைக்கும்

தேவை.

கார்ட்டூன் (கிண்டல் சித்திரம்) வரைபவர் உடனே தேவை.

மானேஜர்.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்

வாரப்பதிப்பு.

சென்னை	சனி	6-11-48

தற்கொலை வேண்டாம்!

—: (x) :—

வர்த்தகத் தோழர்களே!

வியாபார நண்பர்களே!

உங்கள் நெஞ்சகத்தில் கை வைத்துச்சொல்லுங்கள்-உங்கள் நேர்மையுள்ளத்தைக் கேட்டுச்சொல்லுங்கள் - நடுநிலைமை கோலில் நின்று பதில் கூறுங்கள்; நியாய புத்தி கொண்டு தீர்ப்புக் கூறுங்கள்; பங்கிடு முறைகள், கட்டுப்பாடுகள் ஏன் வந்தன? அண்மையில் ஏன் ஓரளவுக்கு எடுபட்டன? இப்போது மீண்டும் ஏன் 'பழைய குருடி கதவைத் திறடி' என்று வருகின்றன? இது வர்த்தகவுலகுக்கே மானக்கேடும் தலையிறக்கமும் அவநம்பிக்கைக்களங்கமுமல்லவா?

இது குறுக்கெழுத்துப் போட்டி வித்தையோ, ஜோதிச கணிதமோ, வான நூலாராய்ச்சியோ அல்ல. எனவே நீங்கள் பளிச்சென்று கூறலாம்; 'உற்பத்தி குறைவு, இறக்குமதி குறைவு. பற்றாக்குறைவும்தான் காரண"மென்று. இது ஒரு வகையில் உண்மைதான். ஆனால் இந்த பதில்; "அப்பாவுடன் ஏன் சண்டை வந்ததென்று குழந்தை தாயைக்கேட்டால் அதற்குத் தாய், சமயலாக நேரமாகி விட்டதனால் அப்பாவுக்கு பசிக்கோபம் வந்து விட்டது;' என்று கூறுவதுபோலத் தானிருக்கிறது. ஒரு தாயே தான் பெற்ற பிள்ளையிடம் உண்மை அடிப்படைக் காரணத்தைக் கூறத் தயங்கும்போது, நீங்கள் உண்மைக் காரணங்களை மறைத்துக் கூறுவது இயற்கை விரோதமல்லதான். ஆனால் அதே தாய், உண்மைக் காரணத்தை - அதாவது நகையாலோ பணத்தாலோ ஏற்பட்டிருந்தால், அதனைத் தன் குழந்தையிடம் வெளிப்படையாகக் கூறியிருந்தால், மூடிவைத்ததைவிட பல பங்கு அதிக பலன் ஏற்பட்டிருக்கும். ஏனென்றால், அக்குழந்தை வயதடைந்ததும், இம்மாதிரி தவறு செய்யாமலிருக்க, இப்போதே நன்னெறியைக் கற்றுக்கொண்டிருக்கலாம். அத்துடன், தன் மழலை வார்த்தைகளைக் கொண்டோ, கண்ணீரைக் கொண்டோ தகப்பனின் கோபத்தைத் தணித்து, தாய்க்கும், தந்தைக்கும் ஏற்பட்ட மனத்தாங்கலைத் தீர்த்துவைத்திருக்கலாம். மூடிவைப்பதால், இருவருள்ளத்திலும் குரோதம்தான் வலுத்து புரையேறி குடும்ப வாழ்க்கையை பாழ்படுத்தும். தவறிழைப்பது, சுயநலம் பேணுவது, மனிதத் தன்மைக்கேமாபெரும் குற்றமல்ல; தவறிழைப்பது மனித சுபாவமே; ஆசை கொள்வதும் இயற்கையின் போக்குதான். ஆனால், இதனால் தனக்கோ, அல்லது, பொதுஜனங்களுக்கோ, கெடுதி நேரிடாமல் பார்த்துக்கொள்வதும், அறிவுடையோர் கடமையாகும். தவறை ஒப்புக்கொள்வதும் மானக்கேடாகாது. உலக உத்தமரான காந்தியடிகளும், தமது "இமாலயத் தவறுக்களை," வெளிப்படையாகக் கூறிக் கொள்ள வில்லையா? என் கூறினர். தனக்கு மானக்கேடு விளைவித்துக் கொள்ளவேண்டும், தலையிறக்கத்தை வலிய வரவழைத்துக்கொள்ளவேண்டுமென்ற ஆசையாலா? அல்லவே. தன் தவறைக் கூறித் தன்னைத்தானே திருத்திக் கொள்ள வழிசெய்துகொள்ளவும், இத்தவறுகளையுணர்ந்து மற்றோரும், எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவேண்டுமென்ற பெருந் தன்மையால்தானே?

எனவே கட்டுப்பாடுகள் வந்ததற்கு நீங்கள் கூறுவது, உடனடியான, மேலளவான காரணமாகலாம்; ஆனால், அடிப்படை உண்மை காரணங்கள் என்ன? அளவுக்கு மீறியவிலையேற்றமும், அமித லாபமும் இவற்றைச் சமாளிக்க இயலாது, ஏழைமக்கள் தத்தளித்ததும் தான். இதனை நீங்களும் மறுக்க மாட்டீர்கள்; மறுக்கத் துணிவு கொள்ளவும் இயலாது. கட்டுப்பாட்டை நீக்கியது உங்கள் நேர்மையைச் சோதிக்க. இந்தச் சோதனையில் நீங்கள் தவறியதால்தான், மீண்டும் கட்டுப்பாடு அவசியமாயிற்று.

மற்றொன்று உங்கள் நேர்மையுள்ளத்தை விசாரித்துப்பாருங்கள். நீங்கள் யார்? நீங்கள் கொட்டிச் சேர்க்கும் லாபம் யாருக்கு? இந்தக் கொள்ளை லாபம் யாரிடமிருந்து அடைகிறீர்கள்? இந்த லாபப் பணம் முழுவதும் உங்கள் பெட்டியில் படுத்துத் தூங்குகிறதா? உங்கள் இரும்புப் பெட்டியைத்தான் அடைகிறதா? எல்லாவற்றையும் நீங்களே அனுபவிக்கிறீர்களா? இதற்கு நேரிடை பதில் என்ன? நீங்கள் இந்நாட்டு மக்கள். அடையும் லாபம்முழுதும் உங்களுக்கே என்று ஒருக்காலும் சொல்லமுடியாது. வரவு செலவு, கணக்கு வழக்குகளை, நுணுகிப் பார்க்குமிடத்து, நீங்கள் அடையும் கொள்ளைலாபம், உங்கள் நாட்டு மக்கள், - உங்களுடன் வாழும் சொந்த சகோதரர்கள் - குடும்பத்தார், சகாக்கள் என்பவர்களிடமிருந்து தான் சுரண்டுகிறீர்கள். இந்த லாபம் முழுவதும் நீங்களே முழுக்க முழுக்க அனுபவிக்கக் கிடைத்திருக்கிறதா வென்றால் அதுதானில்லை. ஆற்றில் வந்தது வெள்ளத்தில் போயிற்றென்ற கதை போலத் தானிருக்கிறது நீங்கள் லாபமடைந்த கதை. உதாரணமாக ஒரு ஜவுளி வியாபாரி, கஜம் எட்டணா துணியை இரண்டு ரூபாயிக்கு விற்பதாக வைத்துக் கொள்வோம். நியாயப்படியான லாபம், ரூபாய்க்கு நாலணா வைக்கலாம். ஆனால், வைத்து விற்ற கொள்ளை லாபமோ அசலைப் போல் நான்கைந்து பங்கு. "ஏமாளி முட்டாளுலகத்தை ஏமாற்றி விட்டோம்" என்று அந்த ஜவுளி வியாபாரி தனக்குள் மகிழலாம். ஆனால், உண்மை அப்படியல்ல. இவரைப் போன்று தானே மற்ற பண்டங்களில் வியாபாரம் செய்பவர்களும் புத்திசாலிகளாக, சுய லாபக்காரர்களாக, உஷார் பேர்வழிகளாக கண்கட்டு ஜாலக்காரர்களாக, சொக்குப் பொடிக் காரர்களாக இருப்பார்கள்? ஆகவே, அவர்களும் இந்தத் துணி வியாபாரி போன்றே, சரி நிறையாக, தாங்கள் விற்கும் பண்டங்களின் மீது லாபம் வைக்க முற்படுகிறார்கள். அதனால், இந்தத் துணி வியாபாரி, துணியைத் தவிர்த்து மற்ற உணவுப் பண்டங்களையும் அத்தியாவசியப் பொருள்களையும் கட்டிட சாமான்களையும், ஒன்றுக்குநான்கு மடங்கு லாபம் கொடுத்து வாங்கத் தானே வேண்டும்? அப்போது தான் ஒரு வகையிலடைந்த லாபத்தை; தானறியாத போக்கில் பல வழிகளிலும் விரயமாக்க வேண்டி நேரிடுகிறது. இறுதியில் "ஆக முடிவு" வரவு செலவுகளைப் பார்க்கும் போது தானடைந்த லாபம் வெறும் கானல் தோற்றமாயிருக்கலாம். அல்லது சில சமயங்களில் முதலுக்கே மோசமாக விருக்கலாம். மோசம் நாசம் கம்பிளி வேஷமென்று மாகலாம். எனவே, இந்த லாபக் கொள்ளைப் பேராசை என்பது! இன நாசமும் தற்கொலைபோன்றதும் அல்லவா என்பதைநமது வர்த்தகநளபர்கள் யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

ஒரு வகையில் விலையிறங்கினால் எல்லா வகைகளிலும் விலையிறங்குவதை வர்த்தக உலகம் அறிந்ததே. ஒருவர் தியாகம் செய்தால் மற்றவர்களும் தியாகம் செய்யத் தூண்டுவது வர்த்தகத் துறையின் போட்டிப் பண்பென்பது கண்கண்ட உண்மை. எனவே, இனி மேலாகிலும் வர்த்தக நண்பர்கள், பெரும் லாபப் பேராசை என்ற தற்கொலைப் போக்கை விடுத்து உலகப் பொது நலப்பான்மையுடன் தன்னலத்தை வளர்க்க முற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். ஊர் வாழ்ந்தால் நீங்கள் வாழ முடியுமேயன்றி ஊரைக் கெடுத்து நீங்கள் வாழ்ந்து விடலாமென்று, எண்ணமிடுவது பிழைப்பதற்குநிரந்தரமான வழி செய்யும் புத்திசாலித் தனமாகா தென்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம்.

உடுமலைப்பேட்டையில் தண்ணீர் கஷ்டங்கள்

—: (x) :—

கோவை ஜில்லா, உடுமலை நகரசபை வட்டாரத்தில், விடியாத் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருப்பது பற்றியும் இந்த, அரைவயிற்று "ரேஷன்" யுகத்தில். குறைந்த வயிற்றை சரிகட்ட, இயற்கை அன்னை தரும், அந்த குடிதண்ணீர் கூட "ரேஷன்" அடிதடியாக இருப்பதுபற்றியும், உடுமலை நண்பர் ஒருவர், எமக்கு எழுதியுள்ள முறையீட்டுக் கடிதத்தை முன் பக்கத்தில் வெளியிட்டுள்ளோம், நகரசபையாரும், ஆட்சியாளரும் கண் திறந்து பார்த்து, ஆவன செய்ய வேண்டுமென்ற, நன்னோக்குடன்.

உடுமலை எல்லாத் துறைகளிலும், முக்கியம் வாய்ந்தது, வர்த்தகத்தில் திலகம் போன்றது. நிலவளத்திற்கும், மலை வளத்திற்கும், தொழில்வளத்திற்கும், புகழ்வாய்ந்தது. பணக்காரருக்குப் பஞ்சமே இல்லை. இவ்வித சௌகரியங்கள் எல்லாம் ஒருங்கேயமையப் பெற்றிருந்தும், நகருக்குள் குடிக்கும் தண்ணீர் வசதி போதுமான அளவுக்கு, செய்துகொடுக்க முனிசிபாலிடியோ, செல்வாக்குள்ளவர்களோ, பணக்காரர்களோ முன் வாராதது, மிக, மிக விசனிக்கத்தக்கதாகும். கட்டுப்பாடு வேலியில் பிணைக்கப்படாத இந்த தண்ணீருக்கும், திண்டாட்டம் இங்கு எப்போதுமே இருந்து வருகிறது.

தண்ணீர் வசதி செய்ய வாய்ப்பில்லையா? வசதி இல்லையா என்றால், ஜீவநதிகளான அமராவதியும், காவேரியினும் தெளிந்த, சுகந் தரும் பால் போன்ற தண்ணீரைக் கொண்ட பாலாறு, சின்னாறு, பிரம்பாறு, மூணாறு முதலியன ஓடிக்கொண்டிருக்கின்றனவே! சந்திரவட்டம்போல நகரை வளைத்தபடி, 10-12 மைல் தொலைவில் திருமூர்த்தி மலைப் பகுதியில், பாலாற்றிலும், மூணாற்றுப் பகுதியில் கம்பன் கோட்டையைச் சார்ந்த கல்லாபுரத்திலும், அமராவதியில் குமாலிங்கம், மடத்துக் குளத்திலும் அணை கட்டலாமே! இந்த இடங்கள், மலைமேட்டிலிருப்பதால், செலவும், குழாய்கள் அமைக்கும் செலவும் மிக்ககுறைவே.

இவ்விதம், இயற்கைத் தேக்கத்துக்கு, வழி இருந்தும் எவரும், முனைந்து நின்றாரில்லை; ஏன்? தலைவலியும் காயச்சலும் தனக்கு வந்தாலல்லவா தெரியும்! பணக்காரருக்கு ஆள் மாகாணமுண்டு வேண்டிய

அண்டாக்கள் நிரப்பிக் கொடுக்க; மாட்டுவண்டி உண்டு வேண்டிய மட்டும் வீடுசேர்க்க. கஷ்டப்படுபவர்களெல்லாம் தொழிலாள ஏழைகளும் நடுத்தர இனத்தைச் சேர்ந்தவர்களுமேயல்லவா? அதுவும் பாவம் அத்தகையோரின் பெண்டீர்களே யல்லவர்? இவர்களுடைய கஷ்டங்களைத் தீர்க்க வேண்டியது மற்ற எல்லாருடைய கடமையல்லவா? இவ்வசிரத்தையின் காரணமாகவே நகரமும் நரகத்தை நோக்கிப் போய்க் கொண்டேயிருக்கிறது. பிறந்த நாட்டுப் பற்றுள்ள எவரும் இதைச் சகிக்க முடியாதுதான். இக்கவலையும், பற்றுதலும் பணக்காரருக்கு உதித்தால்தானே! பணக்காரரின் பணம், கோர்ட்டுகளில் செலவழிக்கவும், தேர்தல்களில் விரையஞ் செய்யவும், இன்னும் எத்தனையோ விஷயங்களில் பாழாக்கவுமல்லவா உதவும்! பத்து லக்ஷம் வேண்டுமானாலும் ஒற்றை நிமிஷத்தில் கொடுக்கக் கூடிய செல்வந்தர்கள் உடுமலையில் ஏராளமாக உண்டென்பதை நாமறிவோம். பாழான பணமிருந்தென்ன செய்வது? மனமல்லவா வேண்டும். அதனால்தானே பாடினார் ஔவை,

"பாடு பட்டுத் தேடி பணத்தைப்
புதைத்துவைத்து
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்
கூடுவிட்டு ஆவி தான் போனபின்
யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்?"

என்றே இயம்பினார். இன்னும் பாாப்போம்.

சென்னை சர்க்காரே பதில் சொல்லட்டும்!

PVRV

சென்னை சர்காரே வடநாட்டு இந்தியை நமது தமிழ் நாட்டில் வைக்கலாமா? தமிழ் நாட்டிலே தமிழை வைக்காமல் வாயில் நுழையாத வடநாட்டு இந்தியை வைத்தால் எப்படிவரும்? தமிழே இன்னும் எத்தனையோ பேர்களுக்கு சரியாகத் தெரியாத போது இந்தி எப்படி படிக்கிறது?

பிறகு ஒரு கோயில் விக்ரகத்துக்காக ஆயிரக்கணக்கான நகைகளும், வைரங்களும் முத்துபவளம். முதலியவைகளும் பன்னீர், அத்தர், முதலியவைகளும் எதற்காக? அதற்கு ஒரு பள்ளிக்கூடம் கட்டினால் என்ன? கிராம மக்கள் பலர் படிக்கத் தெரியாதவர்களாயிற்றே! இந்த ஏழைகளுக்குப் பாடசாலை ஏற்படுத்தலாமல்லவா?

"ஆரம்பப்பள்ளி பாலகன்"

கூப்பாடுபோடும் கள்ளச் "செக்"

அமெரிக்காவில், ஒரு அச்சுஸ்தாபனம் 75 ஆண்டுகளாகஆராய்ந்து ஒரு விசித்திர "செக்" தாளைத் தயாரித்திருக்கிறது. இது பார்ப்பதற்கு சாதாரண செக், தாளைப்போன்றுதான் அமைந்திருக்கிறது. இதற்காக தயாரிக்கப் பட்டுள்ள ஒரு இயந்திரத்தில் பரங்கு குமஸ்தா இந்தக் செக்கை வைத்தால் கள்ளச் செக்காயிருந்தால் "நான்கள்ளன் நான்கள்ளன்" என்று கூப்பாடுபோடுமாம். பொய்க் கையெழுத்தின்றி உண்மை செக்காயிருந்தால் சப்தமிருக்காதாம்.

தேசீய "தினமணி"யே

நேர்மையும் தேசீயமும் இதுதான் போலும்

குட்டிச்சாத்தானே!

குண்டாந்தடியின் வணக்கம்.

—: (o) :—

சகோதரப்பத்திரிகையான "தினமணி" தன் 2-11-1948 செவ்வாய்க்கிழமை இதழில்

"தேகவீர்யம் மீண்டும் பெற புதிய கிலாண்டு, நரம்பு மற்றும் இரத்தத்தை தூண்டும் மருந்து"

என்னும் தலைப்தன் கீழ் ஒரு விளம்பரத்தைப் பிரசுரித்திருப்பதைக் காங்கிரஸ் சர்க்கார் கவனிக்குமாறு வேண்டுகிறோம்.

அதே விளம்பரத்தில், "ஜீவாதாரமான ஆரோக்கிய வாழ்க்கை இன்பத்தை மீண்டும் அனுபவியுங்கள்" "நரம்புத்தளர்ச்சி" "ஸ்திரீகள் குடும்ப சந்தோஷத்துடன் வாழ்க்கை இன்பத்தைப் பெற ஆடவர்களைப் போலவே—எடுத்துக் சொல்லவேண்டும்' "இப்போது வாலிப உணர்ச்சியைப் பெற்று பல சாலியாக வாழ்க்கையை அனுபவிக்கிறேன்" "நான் சோர்வோ நரம்புத்தளர்ச்சியோ அடைவது இல்லை" "உண்மையில் நான் 20-வருஷங்களுக்கு முன்பு இருந்த யௌவனத்தை உணர்கிறேன். இப்போது எனக்கு வாழ்க்கையே அற்புதமாகத் தோன்றுகிறது" எனக்கண்டிருக்கும் விமர்சனங்களையும், காங்கிரஸ் சர்க்கார் கவனிக்க வேண்டுகிறோம்.

அதே, விளம்பரத்தில் ஒரு ஆடவனும் பெண்ணும் "அம்மணம்" என்ற அளவுக்கு ஆடையொன்றுமில்லாமல் பக்கம் பக்கம் உட்கார்ந்து கேளிக்கைக்கு தயாராகுவதுபோல் போடப்பட்டிருக்கும் படத்தைக் காங்கிரஸ் சர்க்கார் கவனிக்கவேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறோம்.

விமர்சனத்தையும் படத்தையும் ஒன்று சேர்த்துப் பார்த்தாலும் தனித்தனியே கவனித்தாலும் இது ஆபாசமான விளம்பரம் அல்ல என்று சொல்வதற்குண்டா?

இத்தகைய விளம்பரங்கள் சிறுவர்களின் உள்ளத்தையும் மற்றவர்களையும் கெடுத்து தீயவழிக்குத் தூண்டாது என்று சொல்லமுடியுமா?

இவ்வித ஆபாச விளம்பரங்களைப் பிரசுரிப்பதை 'பலப்பல தனிப்பட்ட நபர்களும் பொதுநலப் பத்திரிகைகளும், ஆட்சியாளரும் அவ்வப்போது கண்டித்து வரவில்லை என்றோ தெரியாதென்றோசொல்ல முடியுமா?

"விம், விகர் வைட்டாலிட்டி" என்னும் வார்த்தைகளை ஒரு விளம்பரத்தில் பிரசுரித்ததற்காக இதே தினமணியின் சககளத்தியான "இந்தியன் எக்ஸ்பிரஸ்" அபாரதம் கொடுத்திருந்து தினமணி இவ்வித ஆபாச விளம்பரத்தை அச்சமின்றிப் பிரசுரித்த காரணமென்ன என்று கேட்டால் பிசகாகுமா?

இவ்வித ஆபாச விளம்பரத்தைப் புகுத்தியது காசாசையாலா, பணப்பெருக்க மகிழ்ச்சியாலா அல்லது காங்கிரஸ் ஆட்சியில் தன்னைத் தட்டிக்கேட்க ஆளில்லை, என்ற மமதையாலா என்பதை பொதுமக்கள் தெரிய விரும்புவது நியாயந்தானே.

சுதந்திரம் என்றே சொல்லப்பட்ட தரித்திரம் நாட்டையடைந்த பிறகு தேசிய பத்திரிகைகள் என அழைக்கப்பட்டு வந்த பத்திரிகைகள் தான்தோன்றித் தனமாயும்,' வஞ்சம் தீர்க்கும்தன்மையிலும், தலையங்கங்கள் தீட்டிவருவதாகப் சொல்லப் படு வது உண்மையா?

சுதந்திரத்திற்குப்பின் பிராமணல்லாதாரின் பேரில் 'ஹிந்து' எழுதிய தலையங்கத்தையும், காகிதக் கட்டுப்பாடு சம்மந்தமாய் தன்பேரில் நடவடிக்கை எடுத்து, கேஸ் நடத்தியவர்களை மிரட்டியும் பயமுறுத்தியும் "தினசரி" எழுதிய தலையங்கத்தையும், மக்கள் மறந்துவிட முடியுமா?

இவ்வித் தலையங்கங்களை சுதந்திரம் அடைந்ததாகக் கருதப்படும் தேதிக்கு முன்னதாக இப்பத்திரிகைள் ஏன் எழுதவில்லை என்பதையும் இப்போது சுதந்திரத்திற்குப் பின் அடைந்த துணிச்சலுக்குக் காரணத்தையும் தெரிந்துகொள்ள வேண்டியது காங்கிரஸ் சர்க்காரின் கடமையும் பொது மக்களின் உரிமையுமல்லவா?

தினமணி கொண்டுள்ள துணிச்சலுக்கு காரணமும் இதுதான் போலும். எதுவாயிருந்தாலும், பெற்ற பிள்ளையாயனும், முக்கண் திறந்தாலும் குற்றங் குற்றமே என்பதை "குண்டாந்தடி" எடுத்துக் காட்டவேண்டிய அவசியம் உண்டோ? உண்டோ?

குட்டிச்சாத்தானே கும்பிடுகின்றேன்

"குண்டாந்தடி"

இந்தி எதிர்ப்பும் வேதரத்தினமும்

திருத்துறைப் பூண்டியான்

—: (x) :—

கண்ணே...! என் கட்டிக் கரும்பே... என்னடி கூப்பிடறேன்...பேசமாட்டேன்கிறீயே...உதைச்சேன்னா பாரு'

உதைக்கிறான். கால் எங்கேயோ போகிறது. தலை 'தன் காதலி' என்று கருதிய கம்பத்தின் மீது மோதவே சுருண்டு வீழ்கிறான்.

"அண்ணேன்-உலகம்...என்னணே! இப்படி சுற்றுது? அட, என்னா கேட்கிறேன் பேசமாட்டேங்கிறீயே...பாரு ஒன்னெ எண்ணுப்பண்ணுறேன்..." வழியிலே கிடக்கிற கல்லைக் கட்டிக் கொண்டு கேட்கிறான் அவன் கல்லோ சுமா என்ன? உதைக்கிறான் கால் புண்ணடைகிறது!

இதெல்லாம் சாலையோரங்களில் மது நாட்களில் நாம் கண்ட குடியர்களின் கோலாகல காட்சிகள்! எதிரிலிருக்கின்ற கம்பம் தன் காதலியாகவும், புதைப்பட்டுக்கிடக்கிற 'மைல் கல்' தன் நண்பராகவும், கருதி அதனுடன் கொஞ்சி, அவைகள் பேசவில்லையே என்று கோபங் கொண்டு மண்டையையும், கால்களையும் உடைத்துக் கொண்டும், ஒடித்துக் கொண்டும் கிடக்கும் அந்த 'ஜீவன்'கள், உள்போதை அதிகமாக ஏற்றப்பட்ட காரணத்தால்...!

காரணம் "போதைமயக்கம் அவர்களை ஆட்கொண்டு விட்டதால் எதிரே என்ன இருக்கிறது? "அது கல்லா அல்லது கம்பமா" என்பதுகூட அவர்களுக்குப் புரியாது! இந்த போதையாளர்கள்—குடியர்கள்—செயலையும் மீறிய வகையால் நாட்டில் நடமாடும் சில 'ஜீவன்'கள் இருக்கின்றன! அவர்கள் "பெரிய மனுஷன்" ஆக வேண்டும் என்கிற குடி வெறியில் சிக்கிய பேராசை கொண்டவர்கள்! 'வாய்க்கு வந்ததை' எல்லாம் அதிகார வெறி போதையால் உளறிக் கொட்டச் சொல்லும்!

"இந்தியை எதிர்ப்பதாகக் கூறுபவர்கள்—இந்தி எதிர்ப்பை நடத்தும் தளகர்த்தர்களாக யிருப்பவர்கள் மழைக்குக்கூட இஸ்கூல் 'காலேஜு' பக்கம் ஒண்டாதவர்கள்."

இது திருவல்லிக்கேணி பெரிய தெருவில் நடைபெற்ற காந்தியார் பிறந்த நாள் விழாக்கூட்டத்தில் 24-10.48ல் பேசிய வேதாரண்யம் திரு வேதரத்தினம் பேசிக் கொட்டியது! காந்தியார் பிறந்த நாளுக்கும் அவர் பேசியதற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்காதீர்கள்...இப்படியெல்லாம் பேசாவிட்டால் எப்படி அவருக்கு திருத்துறைப்பூண்டி தாலுகா வாசிகள் அளித்திருக்கும் "வெத்து வேட்டு" என்ற பட்டம் நிலைக்க முடியும்?

ஹிந்திக்கு வக்காலத்து வாங்கித் திரியும் இந்த ஆசாமி, தன் 'அட்ரசை' இந்தி ஆதரிப்பு என்பதன் மூலம் 'பசைகாயாமல்' செய்து வருகிற பிரகிருதி என்பது யாவருக்கும் விளங்கியது தான்! தமிழைக் காப்பவர்கள் தன்னைப் போன்றவர்கள் தான்என வீர முழக்கம் செய்ய இருமிக் கொண்டே (இருமல் இயற்கையாக ஏற்பட்டதல்ல. இந்தியை ஆதரித்தும் பேச விஷயம் அகப்படாமல் விழித்ததைக் காட்டிக் கொள்ளாமல் இருப்பதற்காகச் செய்தது) முயன்ற 'வெத்து வேட்டு' ஆசாமி முதலில் கூட்டம் துவங்கியபொழுது தலைவரைப் பார்த்து விளித்து 'அக்கிராசனாதிபதி' அவர்களே என்று! தமிழைக் காக்கும்

ஸ்ரீமான்' அல்லவா? நல்ல சொல்லான 'தலைவர்' அது வாயில் எப்படி நுழையும்?

'வெத்து வேட்டு' சொல்கிறது 'இஸ்கூல்' (ஸ்கூல் என்பதன் அவரது உச்சரிப்பு) 'காலேஜூ, பக்கம் மழைக்குக்கூட ஒண்ட வில்லையாம் இந்தியை எதிர்க்கும் தளகர்த்தர்கள்!

நல்ல வழி நடுவே யிருக்க கோணல் பாதை போவது மாடாக யிருந்தால் அடிக்கலாம்! மதலையாக யிருந்தால் இடுப்பில் எடுத்து வைத்துக் கொள்ளலாம்! ஆனால் வயது முதிர்ந்த—கோணல் வழிப் பேர் வழிகளிடம் என்ன செய்வது?

இந்தி எதிர்ப்புத் தளகர்த்தர்கள் கல்விக் கூடத்தின் பக்கலிலும் ஒதுங்காதவர்கள் என்று இந்தப் பேர் வழி' கதறியதை நினைக்கும் பொழுது கோணல் வழி போகும் மாட்டின் நினைவோ, 'குட்டிக்கரணம்' போடும் குரங்கின் ஞாபகமோ நமக்குவரவில்லை! ஆனால் "கம்பத்தை' காதலியாகப் பிடித்து, கபோதியாக தானில்லாமலிருந்தாலும்; கள் குடி போதை ஏறியதால் 'காதலி' என்றழைத்து மண்டையை உடைத்துக் கொண்டானே குடிகாரன்' அவன் எண்ணம் தான் வருகிறது. காரணம் 'வெத்து வேட்டு' பிரகிருதிக்குப் போதை யில்லாமலிருந்தால் தூண் சரியாகத் தெரிந்திருக்கும். இந்தி எதிர்ப்பு சர்வாதிகாரி அண்ணாதுரை 'M. A' என்பது!

மறை மலையடிகள் 'தனைனப் போல' அல்ல, ஒரு 'B. A' என்பது! அப்போது புரியும் 'திரு. வி, க' தமிழ்க்கடல், ச, சோ. பாரதி பல் கலைக்கழகத்தின் பேராசிரியர்' என்பதெல்லாம்... பாவம்... இந்த கட்சிப் போதை வெறிக்காரருக்கு எங்கேஇதெல்லாம் புலனாகப் போகிறது? அவருக்குத்தான் 'ஸ்கூலே தெரியவில்லை... 'இஸ்கூல்' தானே தெரிகிறது.

—: (x) :—

டெலிபோன் 2597.

(ஸ்தாபிதம் 1931.)

B. R. & Sons,

33, திருவேங்கிட முதலித் தெரு,
பெரியமேட்டு, சென்னை 3.

பெரியமெட்டு சப்-ரிஜிஸ்தரா ராபீசுக்கு
அடுத்த மேல்புறத்துச் சந்து



- ★ எல்லாவித பத்திரங்களும் எழுதுதல்.
- ★ தமிழிலும் இங்கிலீஷிலும் டைப் அடித்தல்
- ★ பத்திரங்களைப் பரிசோதித்து பாத்தியா பாத்தியங்களைத் தெரிவித்தல்
- ★ ரிஜிஸ்தரேஷன், ஸ்டாம்பு முதலிய தகவல்களை அளித்தல்.
- ★ சொத்துக்களின்பேரில் அடமானங்கள் ஏற்பாடு செய்தல்.
- ★ சொத்துக்களின்பேரில் கடன்கள் பெறல்,
- ★ கிரயங்கொள்வதற்கும், விற்பனை செய்வதற்கும்.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் திறமைக்கும்
உண்மைக்கும் தகுந்த இடம் இதுவே.

முபாரக்கின் கலை ஓவியச் சித்திரம்

பில்ஹணா

அல்லது

கவியின் காதல்

★

K. R. ராமசாமி, A. R. சகுந்தலா,
S. M. ஷெயிக்கப்பா, R. பாலசரஸ்வதி,
சுந்தர் ராவ், N. ஜெயஸ்ரீ,
மணி ஐயர், G. சகுந்தலா,
புளி மூட்டை, அங்கமுத்து.
களி மண்ணு.

மற்றும் 1001 பேர்கள் நடித்தது.

★

விவரங்களுக்கு:—

K. R. பாஷா, (மேனேஜிங் டைரக்டர்)
முபாரக் பிச்சர்ஸ், Ltd.
47, லாங்ஸ் கார்டன் ரோட்,
புதுப்பேட்டை, சென்னை.

முதலாவது ஹிந்தி மொழிப்போர்.

B. கணேசன்
[B, A. (Honrs.)]

[சென்ற வாரத் தொடர்ச்சி]

காங்கிரஸ் சர்க்காரைத் தாக்குவதற்காக, அரசியலதிகார வெறி பிடித்து பெரியார் ஈ. வெ. ரா. இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைத் தூண்டித்துவக்கிவிட்டாரென் எதிரிகள் பொய்ப்பிரசாரத்திலிறங்க முற்பட்டனர். காங்கிரஸ் மீது தனக்குள்ள வெறுப்பை, வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார் பெரியாரென எதிரிகள் வட்டாரங்களில் பேசப்பட்டது. தங்களது உண்மையானப் பான்மையை பொது மக்கள் அறிந்து கொள்ளாதவாறு அணேகோலும் வகையிலேயே மேற்கூறியபடி பிரசாரம் செய்தனரென்பது வெளிப்படை.

இந்தி யெதிர்ப்புப் போருக்குத் தாய்மார்களாலியற்றிய தொண்டு பெரிது பெரிது. சென்னையிலும் வெளியூர்களிலும் அவர்களது ஒத்துழைப்பு பிரமிக்கத் தக்கதாயிருந்தது. ஔவையார். வெளி வீதியார், பெருங்கோப்பெண்டு, எயினிபார், பாரிமகளிர் போன்ற பழங்காலத்தாய்மார்களின் பண்பும் செயலாற்றுந்திறனும் இக்காலத்தாய்மார்களிடமும் ஓரளவு அமைந்து கிடக்கத்தான் செய்கின்றன வென்பதை இந்திப்போர் வெளியாக்கியது.

தமிழ் நாட்டுத் தாய்மார்களின் உணர்ச்சி, தமிழுணர்ச்சி, இந்தியெதிர்ப்புணர்ச்சி மாபெரும் மாநாடாக உருப்பெற்றது. நாட்டின் பல பகுதிகளினின்றும் தமிழ்ப்பெண்கள் திரள் திரளாக வந்து சேர்ந்தனர் மாநாட்டிற்கு. தன்னுணர்வுத் தமிழ்ப் பேராசியர் மறைமலையடிகளாரின் திருமகள் நீலாம்பிகையம்மையார் மாநாட்டிற்குத் தலைமை தாங்கி உணர்ச்சிக்கிளர்ச்சியும் வளர உத்வேகத்துடன் பேசினர். சுதந்தர திராவிட நாட்டு வரலாற்றில் இடம் பெறவேண்டிய இம்மாபெரும் மாநாட்டில் பெரியாரவர்களும் கலந்துகொண்டு அரிய, ஆணித்தரமான கருத்துக்களடங்கிய சொற்பொழிவாற்றினர். ஆரிய மந்திரிசபையின் அடாதசெயலை திரம்படக் கண்டித்தார். பெரியார் பேச்சால் பெண்களின் அன்புள்ளத்திலும் ஆக்ரோஷம் உண்டாயிற்று. முன்தானையை வரிந்துகட்டி சமருக்குத் தயாராயினர். தங்களது மதிப்பிற்குரிய தலைவருக்குப் பெரியார் என்று பட்டங்கொடுத்து, செயற்கரிய செயலை செய்யுமாறு தூண்டினர். அன்று நம் தாய்மார்கள் அளித்த பட்டம் இன்று நாடெங்கும், கிராமந்தோறும், பட்டி தொட்டிகளிலும் பாங்குடன் உச்சரிக்கப்படுகிறது. பெரியார் 'பட்டம் நாளடைவில் அவருக்கமைந்த இயற்பெயராகவே மாறிவிட்டது. அரசியல், சமூகத் துறைகளில் அவரது கொள்கைக்கு மாறுபட்டோரும் தங்களையறியாமலே அவரை பெரியார், என்றே அழைத்து வருகின்றனர்.

மாநாட்டில் தாய்மார்கள் காட்டிய ஆர்வம், எழுப்பிய உணர்ச்சி, ஏற்படுத்திய கிளர்ச்சி பெரியாருக்கு உள்ளபடியே புதியபலத்தையளித்ததென்றுதான் சொல்லவேண்டும். தனது தொண்டுக்குநாட்டில் நல்வரவேற்பிருக்கிறதென்பதை அன்றுதான் பெரியார் முற்றிலுமுணர்ந்தார். எதிர்காலத்தலைவர்களை, புத்துலக சிற்பிகளைத்தயாரித்துநாட்டுக்குத் தருபவர்கள் தாய்மார்களே. அத்தகைய தாய்மார்கள் தன்னுணர்வுக் தாய்மார்களாகக் காட்சியளிக்கக்கண்ட கர்மவீரர் பெரியாருக்கு மகிழ்ச்சிப்பெருக்கு இல்லாதிருக்குமா?

ஆச்சாரியார் ஒன்று நினைத்து ஒன்று செய்ய: விளைவு விபரீதகாகவந்து முடிந்தது. வஞ்சக எண்ணத்தால் நுழைக்கப் பெற்ற இந்தி மொழி தமிழர் களிடையே மொழியார்வத்தைத் தூண்டிக் கிளப்பியது ஒருபுறமிருக்க தமிழர் ஒன்று கூடிப்பேச, எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க வாய்ப்பளித்து, தன்மானத் தமிழரிடையே ஏற்பட்ட மொழியாலும் இணைப்பற்றையுண்டாக்கப் பெரிதும்துணைசெய்தது. தான்தமிழன் தன் மொழி தமிழ், தன்நாடு தமிழ் நாடு தமிழ்நாடு என்பதைத் தமிழ் மகன் அறிந்துணர வாய்ப்பேற் பட்டது. மொழிப்போர் இனப்போராக மாற நெடிது நாள் பிடிக்கவில்லை. "தமிழ் நாடு தமிழருக்கே" என்ற சங்கநாதம் தமிழர் போரொலி இந்தியெதிர்ப்புப் போராட்டத்திலிருந்து எழுந்ததேயாகும்.

இந்திப்போராட்டம் உச்ச நிலையடைந்து வந்ததை மந்திரிசபை படிப்படியாகக் கண்டுகொண்டே வந்தது. கிளர்ச்சி முற்ற, முற்ற தலைவலி அதிகமாகி திருகு வலியாயிற்று ஆச்சாரியாருக்கு. பெரியார் இராமசாமியை வெளியில் வுலவவிட்டு வைப்பது மாபெரும் ஆபத்து என்று நினைத்தார் போலும்......! பெரியாரும் கைதியானர். தமிழ் மொழிகாக்க, தமிழர் மானங்காக்க, தமிழ்நாடு உரிமை காக்க தனது தளர்ந்த வயதில் சிறைத் தண்டனை பெற்ருர். ஒத்துழையாமை தீண்டாமை, சமதர்மப் பிரசார இயக்கங்களுக்காக அடுத்தடுத்து சிறை சென்று தனது லட்சியத்துக்கு, சீரும் சிறப்பும், செல்வாக்கும் ஆதரவும் பெற்றுக் கொண்ட பெரியார் தமிழுக்காக, தமிழர் மீட்சிக்காக சிறைசெல்ல நேர்ந்ததைப் பெருமையாகவே கருதினர். புன் முறுவல் பூத்தமுகத்துடன், வெள்ளித்தாடி அசைய, கைத்தடியூன்றி சிறைக் கோட்டம் நண்ணினர். எங்கள் நல்வாழ்வுக்காக எதற்கும் துணிந்த தலைவனே! நீ நீடு வாழ்க! நின் உறுதி வெல்க!! எனத் தமிழர் வழிகூட்டியனுப்பினர் தங்களின் தனிப் பெருந்தலைவரை. (தொடரும்)

செய்தியும் சிந்தனையும்!

மூடிவைக்கட்டுமே!

பல்கலைக் கழகங்களில் ஆங்கில மொழியை உடனடியாக திணிக்க தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டால், கல்வி போதனு முறையும் கல்வி முன்னேற்றமும் தடைபடுவதுடன் கல்லூரிகளையும் மூடிவைக்க வேண்டியதாகிவிடுமென்ருர் சென்னை சர்வகலாசாலை துணை அமைச்சர் சர். லட்சுமணசாமி முதலியார், தென்னிந்திய கல்வி வாரத்தைத் தொடங்கி வைக்கையில்

• • • • •

இதைக்கேட்டதும், சில வாலிபக் காளைகள் 'மூடித்தொலைக்கட்டுமே, இங்கே யாருக்கு நஷ்டம்? இந்த பி. ஏ. எம். ஏக்களுக்கு இப்போது தான் மதிப்பே கிடையாதே! உத்தியோகமும் கிடையாதே! படித்த படிப்பு நஷ்டக் கணக்குத்தானே. அதோடு பட்டதாரிப் படிப் பெல்லாம் பட்டைதாரிகளான பொம்மனுட்டிகள் படிப்பாகி விட்டதே. பள்ளிக்கூடத்திலும் அவர்களுடன் போட்டாப்போட்டி வாய்போர் நடத்த இங்கு யாரால் முடியும்! இனிமேல் அந்தப்படிப்பு இங்கே யாருக்கு வேண்டும்" என்றுமகிழ்ச்சியடைகிருர்!

சுரண்டலுக்கு எதிர் சுரண்டலா?

அறிஞர் அண்ணுதுரை எம். ஏ. அவர்களின் வடநாட்டுச் சுரண்டலை, விளக்கும் "பணத்தோட்டம்" விலை ரூ. 1-0-0,

(விளம்பரம்)

• • • • •

பேஷ்! வடநாட்டார் தென்னுட்டில் வந்து வர்த்தகத்துறையில் சுரண்டுவதற்கு, எதிர்சுரண்டலைத் தொடங்கிவிட்டார் போலும். வடநாட்டாரை விரட்டியடிக்கப் போர் நடாத்தும் படைத் தளபதி?

உண்ணுவிரதம் உடல் ஊழல் கழியவா?

காங்கிரசிலும், சர்க்காரிலும், லஞ்சம் ஊழல், தகுதியற்ற நடை முறைகள் ஆகியவைகள் இருப்பதால் இவற்றை ஒழிக்கச் செய்யவேண்டுமென்பதற்காக காசியைச் சேர்ந்த பிரபல காங்கிரஸ் வாதியான ஸ்ரீ. வி. தேஷ்வாரி பகத், என்பவர் சாகும்வரை, உண்ணு விரதமிருக்கப் போவதாக அறிவித்துள்ளார். உபவாசம் நவம்பர் 2-ம் தேதி தொடக்கமாம்.

• • • • •

உண்ணுவிரத அகிம்சாமந்திர பிரம்மரிஷியான காந்திமகாத்மாவின் உண்ணுவிரதம் கண்டு பயப்படாத ஊழல், ஒரு "நாம்கே வாஸ்தே" யின் உண்ணுவிரதம் கண்டு பயந்து ஓடிவிட வாப்போகிறது? எனவே இந்த உண்ணுவிரதம், உண்ணு விரதக்காரரின் உடல் ஊழலை, குடல் ஊழலை வயிற்று ஊழலை வேண்டுமானல் நீக்கலாம்.

இப்போது காந்தி ஜீக்கள் இல்லையே!

ராஷ்ட ரீய சுயம் சேவ சங்கத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை எடும்பதன் உசிதானுசிதம் பற்றி அபிப்பிராயம் கோரி மாகாணங்களுக்கு இந்திய சர்க்கார் ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிருர்கள்.

• • • • •

இப்போதைய நிலைமையில் இந்த ஆர், எஸ். எஸ். கூட்டத்தாரை கட்டவிழ்த்து விடுவதால், கவலை கொள்ளக் காரணமே கிடையாது. இப்போது இந்து மதத்தைப் புனிதம் செய்ய வரும் மகாத்மாவோ இந்து சமூக நலனுக்கு உண்மையாக உழைக்கும் உண்மை தியாகியோ காண்பதரிதாகி விட்டதே! "எல்லாம் சுயநலம், பதவி மோகம்" யுகம் பிறந்துவிட்டதே! பொதுநல தியாகச் சேற்றில் காலிட்டுக் கொண்டு திண்டாட எந்தகாந்தி ஜீயையும் இனிமேல் காண முடியாதே!

அறிவிப்பு-

ஏஜண்டுகள், தயவுசெய்து நிபந்தனை நமுனுக்களைக் கையெழுத்துச்செய்து அனுப்புவதுடன் நிபந்தனையின் படி அட்வான்சும் அனுப்பித்து பத்திரிகைக்கு ஆதரவு அளிக்க வேண்டுமெனக் கோருகிறோம்.

ரெயில் நேரம்

எழும்பூர் (மெயின் லைன் வழி)

	புறப்பாடு	வருகை
இண்டோசிலோன்		
எக்ஸ்பிரஸ் —	மாலை 8-55	காலை 6-50
செங்கோட்டை		
பாசஞ்சர் —	காலை 7-30	மாலை 7-00
திருவனந்தபுரம்		
பாசஞ்சர் —	மாலை 9-35	காலை 5-40
மதுரை		
பாசஞ்சர் —	மாலை 11-25	காலை 5-10

எழும்பூர் (கார்டு லைன் வழி)

தனுஷ்கோடி		
பாசஞ்சர் —	காலை 10-30	காலை 10-25
திருவனந்தபுரம்		
எக்ஸ்பிரஸ் —	மாலை 8-00	காலை 6-20
திருச்சி		
எக்ஸ்பிரஸ் —	மாலை 10-35	காலை 7-25

சென்ட்ரல்

	புரப்பாடு	வருகை
புளுமவுண்டன்		
எக்ஸ்பிரஸ் —	மாலை 8-10	காலை 7-25
கொச்சி		
எக்ஸ்பிரஸ் -	மாலை 4-35	காலை 10-40
மங்களூர்		
நக்ஸ்பிரஸ் -	மாலை 7-15	காலை 7-30
பெங்களூர்		
பாசஞ்சர் -	காலை 7-15	மாலை 8-45
பெங்களூர்		
பாசஞ்சர் -	மாலை 9-25	காலை 5-35
கல்கத்தா		
பெயில் -	மாலை 7-45	காலை 8-05
பெங்களூர்		
மெயில் -	மாலை 8-50	காலை 6-20
பம்பாய்		
எக்ஸ்பிரஸ் -	மாலை 2-50	மாலை 1-10
பெங்களூர்		
எக்ஸ்பிரஸ் -	காலை 12-45	மாலை 3:30

சிறந்த சரக்கு! குறைந்த விலை!!

விஜயா எம்போரியம்.

உரிமையாளர்:- எல். பி. டி. சுப்பராஜுலு
பெரியகடைத் தெருவு,
உடுமலைப்பேட்டை.

எல்லாவித ஸ்டேஷனரி சாமான்களும்.
ஆயில்மென்ஸ்டோர்ஸ் முதலிய
சகலவித சாமான்களும் கிடைக்கும்.

தொடர் கதை

லக்ஷம் ரூபாய் நக்ஷத்திரம்

—: (o) :—

[முன்வாரத் தொடர்ச்சி]

["பிவியார்"]

எனநீதிபோதம் செய்தான் தில்லையப்பன்.

"அழகான பொருளும் அழகான மனைவியும் கொண்டிருப்பவர்களையும் ஓயாதகவலையும் திகிலும்தான் வாட்டிக்கொண்டிருக்கு" மென முன்னவனுக்கு முச்சலிக்கைக் கொடுத்தான், அங்கப்பன்.

"அஷ்ட லக்ஷண ஆவுடையம்மாளைத் துணைவியாக கொண்டிருக்கிறாயல்லவா? எனவேதான் உனக்கு, அழகிகளைக்கண்டால் வெறுப்புத் தட்டுவது இயற்கைதானே? தனக்குக் கிடைக்காத பழம் புளிக்குமாம்."

என்று கெக்கலிக் கொட்டி சிரித்தான் பிரம்மச்சாரி பிச்சையப்பன்; பெண்வாடை படாத குறையால்.

"இன்னொரு அதிசயமல்லவா? நீ சொல்வதுபோல் நம்ம காஷியர் காமாட்சி நாதன் தன் மனைவியை கொடுமைபடுத்துவான் என்று நம்பமுடியாதிருக்கிறதே. இவன்மேல் வெறுப்புக்கொண்டிருந்தால், இவன் மாலையில் ஆபீசிலிருந்து வருவதை எதிர்பார்த்து அவ்வளவு ஆர்வத்தோடுவாசல் கதவுப்பக்கத்தில் நின்று நின்று தவமான தவம் செய்து கொண்டிருப்பாளா அந்தமனைவாட்டி?

ஆ ஆ! இதுதானப்பனே, உலகம் தெரியாத மனுஷனென்பது. அவள் மந்தகாச மாலைநேரத்திலே அழகுக்கு அழகு செய்து; மோகனவதாரமாக நிற்பது எதற்கென்று நினைக்கிறாய்? இந்த அனுமந்தாயதிருவுருவமான இந்தக்காமாட்சி நாதனிடம் காலமெல்லாம் கட்டுண்டு கிடக்கத் தலைவிதியாச்சுதே, கண்ணுலாவது, நல்லவர்களைப பார்த்து மனச்சாந்தி யடையலாமென் பதற்காகத்தான் பிரகஸ்பதியே! தெரிந்ததா அந்தரங்க ரகசியம்!

"ஓஹோ" அப்படியா? கவி மூளையல்லவா உனக்கு? அதனால்தான் உன் அபார கற்பனை அந்தப்புறத்திலும் பாய்கிறது. உண்மை என்னவானாலும் உன்னைப்பொறுத்த மட்டிலும் சினேகிதன் என்ற அனுதாபத்திற்காக உன் அனுபவ கற்பனைக்கருத்தை ஆதரிக்க வேண்டியிருக்கின்றது. ஏனென்றால் உன்னுடைய அந்தரங்கரகசியத்தையும் நீயே, உன்னை அறியாமலேயே வெளியில் கக்கிவிட்டாய். நீ. மாலை வேளைகளிலே, தெருக்களிலே உல்லாச நடைவிட்டு நடமாடுவதன் மர்மம் இப்போதல்லவா தெரிகிறது. காக்ஷிகண்காக்ஷிக்காகத்தான் இந்தத்திரு வீதிவலமோ?

என்று சொல்லி உரக்க நகைத்தான், ருத்திர மூர்த்தி. மற்றவரும் தொடர்ந்து சிரித்தனர் கைகொட்டி.

மேற்படி பேச்சுக்கள் கசமுசா சங்கத்தில், வராந்தாவில்நடந்தன. சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு மாத்திரமே இங்கே அனுமதி. எனவேகூட்டம் அதிகம் இருக்காது. மேலும் சாதாரண காப்பி ஓட்டலைப்போன்று அல்ல இது. சீட்டாட்டமும் நடக்கும் இடம் இது வேயாகையால் மேஜைகள் நாற்காலிகள் சற்று இடைவிட்டு ஆங்காங்கு அமைக்கப் பட்டிருக்கும். ஒரு மேஜையைச்சுற்றி நான்கு பேர்கள்தான் அமறலாம். அடுத்தமேஜை குறைந்தது பத்தடிக்கப்பாலிருக்கும் சிற்றுண்டிகளும், 'ஆர்டர்' கொடுத்தால் அந்தந்த மேஜையைத்தேடி வந்துவிடும். முக்கியமாக உத்தியோகஸ்தர்களும், பணக்காரர்களும், பணக்காரர்களைப்போல நடிக்கும் இமிடேஷன் பேர்வழிகளும் பணக்காரர்களுக்கு வால்பிடித்து வயிறுவளர்ப்பவர்களும், "பெரியமனிதர்களுக்கு"க் கைதூக்கிகளும் ஆமாம்சாமிகளும் இந்த சங்கத்தில் இடம் பெற்றவர்கள்.

முற்கூறப்பட்ட கோஷ்டி அமர்ந்திருந்த இடத்திற்கு அண்மையில் ஒரு மரத்தட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த தட்டிக்கு அப்பால் உள்ள சிறு அறைதான் சங்கக் காரியதரிசியின் காரியாலயம்; மேற்சொன்னவர்களின் பேச்சில் அடிபட்ட காஷியர் காமட்சி நாதன் பெதுஜன செல்வாக் குடையவன். பலசங்கங்களில் கட்சிகளில் நிர்வாகப் பதவிகள் வகித்து வருபவன். இந்த சங்கத்திலும் கமிட்டி அங்கத்தினர்களில் ஒருவன். முன்னர் இங்கே அடிக்கடி வருவதுண்டு. இப்போது வேறு அலுவல்களும் வேறுசங்கப்பொறுப்புகளும் அதிகம் ஏற்பட்டு விட்டதால் இங்கு அடிக்கடி வரவியலுவதில்லை. வசதிப்பட்ட போதும் முக்கிய அலுவலிருந்தாலும் மாத்திரமே வருவான்

இன்றும் ஏதோவொரு முக்கிய அலுவல் மீது வந்து அவன் காரியதரிசியுடன் பேசிக்கொண்டிருந்தான். ஆனல் அந்த அலுவல் பேச்சுக்குத் தடையுத்தரவை போட்டு விட்டது, மேலே விவரித்த ஆபீஸ் நண்பர்களின் அரட்டைக் கச்சேரி

அவர்கள் பேசின ஒவ்வொரு வார்த்தையும், செய்த கிண்டல்களும் சிரித்த சிரிப்பும், காமாட்சி நாதன் காதிலே, 'கஞ்சி காமாட்சியம்மன் கோயில் மணியடிக்கும் ஓசை போலத்தான் முழங்கிற்று. காமாட்சியம்மன் கோயில் மணியோசை, கேட்கும் பக்தர்களின் உள்ளத்திலே, பக்தியையும், மன ஒருப்பாட்டையும் உண்டாக்கு மென்பர். ஆனல், இந்த அரட்டைக் கச்சேரி, நபர்களின் சொற்களோ காஷியர் காமாட்சி நாதனின் காதிலே, நெஞ்சிலே, எரிகுண்டுகள் பாய்ந்தது போன்ற எரிப்பையும் அரிப்பையும் உண்டு பண்ணின. அவனுடையஉள்ளம் கோபத்தாலும் ஆத்திரத்தாலும் தணலாய் எரிந்தது. அந்தத்தணலில், ஒவ்வொரு கரண்டி எண்ணையை யூற்றியது போன்றிருந்தது அந்த அரட்டை அண்ணல்களின் ஒவ்வொரு எளனச் சிரிப்பொலியும்.

காரிய தரிசி ஐயாவின்முகத்தை எரித்து விடும் பார்வையிலே பார்த்தான் காமாட்சிநாதன். காரியதரிசியோ நடுநடுங்கினன். காமாட்சி நாதனே ஊரறிந்த பெருமாள்மாடு.

சங்கத்திற்கு அவனுடைய தயவு இன்றிமையாதது. அவனைப்பற்றியே அதே சங்கத்தினர்கள் அவதூறு பேசினல், சங்கத்தின் கதி என்னவாகும்? காமாட்சி நாதன் பார்த்து, செய்ய வேண்டுமானல்: சில நாட்களில் இந்தச் சங்கத்தை ஒரேஉருட்டாக உருட்டித் தள்ளி, இருந்த விடம் தெரியாமல் செய்து விடவும் இயலுமே!

காரியதரிசிக்கோ மனவலிவு கிடையாது. ஆட்களைக் காக்காய்ப் பிடிப்பதிலும், இச்சகம் பேசிக் குல்லாய் போடுவதிலும் தான் கைபோனவன். யார் என்ன சொன்னலும் ஆமாம் சாமி போடுபவன். ஆளுக்குத் தகுந்த வேஷம் போட்டு நடிப்பதில் சமர்த்தன். பிறர் தன்னைப் பற்றி கேவலமாகப் பேசுவார்களே யென்ற கவலையே கிடையாது. திட்டு வந்து குத்துமா குடையுமா? பெட்டிக்குப் பணம் வந்தால் போதும் என்பதே அவனுடைய ஜீவக் கொள்கை. இந்த அஷ்ட கல்யாண குணங்கள் தான் அவனுக்கு அந்தக் காரிய தரிசிப் பதவியைக் கூட்டுவித்தவை என்று சொல்லத் தேவையேயில்லை.

மேலே குறிப்பிட்ட பேச்சுக்களையும் காமாட்சி நாதனின் கனல்கக்கும் பார்வைப் பாய்ச்சலையும் கண்டதும் காரியதரிசி பிச்சையப்பனுக்கு அடிவயிற்றில் நெருப்பைக் கொட்டினது போலாகி விட்டது. நெஞ்சுர மற்ற பேடி மனத்தினனன அவன், ஏறக்குறைய மூர்ச்சையற்று விழும் நிலைமைக்கு வந்து விட்டனன்.

காமாட்சியோ, சண்டமாருதம் போல் நாற்காலியிலிருந்து குதித்தெழுந்து மள மள வென வெளியில், ஓட்டமும் நடையுமாகச் சென்றான்-

அவன் தலைமறைந்த பின்னர்தான் பிச்சையப்பனுக்கு உயிர் வந்தது. "காலிங் பெல்லை" (மணி) தன் கை வலிக்கும்வரை அடித்தான்; கோபம் காட்டும் தோற்றத்தில். சேவகர்களிருவர் ஓடி வந்தனர், காளி கோயில் துவாரபாலகர் போன்ற உருவத்தில். அவர்களிடம் தன் அதிகார தோரணையைக்காட்ட வியலாது சற்று நேரம் திக்குமுக்கலாடினன் காரியதரிசிஐயா. பின்னர் அவர்களைமெதுவாக அண்டையிலழைத்து, அந்த அரட்டை கச்சேரிக் காரர்களை எச்சரிக்கும்படி சொல்லியனுப்பினன். இருவரும் வெகு மிடுக்காகத்தான் சென்றனர் வெளியில். ஆனல் முன் குறிப்பிட்ட அரட்டைக் கும்பலை அணுகியதும் இருவரும் கூத்தாடும் குரங்குகள்போல் அபிநயம்பிடித்தனர். அதன் பலன் இரண்டணுக்காசுகள் "பக்ஷீ"சாகக் கிடைத்தன. அவர்கள் முகத்திலே அசட்டுப்புன்னகைதவழச் செய்து கொண்டனர்; நன்றியின் அறி குறியாக. பின்னர் வந்த வழியில் சென்றுவிட்டனர். அரட்டைக் கச்சேரி சீட்டுக் கச்சேரியாக மாறிற்று.

தொடரும்

டெலிபோன் : 86729.

நியூடன் அண்டு கம்பெனி,

80, வாலாஜா ரோடு, மௌண்ட் ரோடு,
சென்னை 2,

கண்ணுக்கினிய எங்கிரேவிங்குகளும், சகல வித ஆப்டோன் பிளாக்குகளும், லைன் பிளாக்குகளும், ட்ரைகலர் பிளாக்குகளும், ரப்பர் ஸ்டாம்புகளும் செய்வதற்கான சிறந்த இடம். நம்பிக்கையும், புகழும் வாய்ந்த தக்க இடம்.

வெளியூர் ஆர்டர்களுக்கு ப்ரத்தியேக கவனிப்பு.

வாசித்தாகவேண்டிய புத்தகம்.
"உடுமலை பீரங்கி"
(முதல் புத்தகம்)



120 பக்கங்கள்

சில பிரதிகளே பாக்கியுள்ளன.

பிரதி 1க்கு விலை அணு 12.
தபால் சார்ஜ் வேறு

பீரங்கி புத்தக நிலையம்,
33. திருவேங்கிட முதலித் தெரு,
பெரியமெட்டு, சென்னை. 3

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்
உடுமலை பீரங்கி

சந்தா விவரம்

பிரதி சனிக்கிழமையும் வெளிவரும்,

தனிப் பிரதி	ரூ.	0—1—0
6 மாதங்களுக்கு	ரூ.	1—8—0
1 வருஷத்திற்கு	ரூ.	2—8—0

6 மாதத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

விளம்பர விகிதங்களுக்கு எழுதவும்.

காரியாலயம்
33 திருவேங்கிட முதலித் தெரு,
பெரியமெட்டு. சென்னை, 3.

—: (x) :—

எல்லா ஊர்களிலும் கிடைக்கும் :

Edited and Published by B. Ranganadha Naidu, 33, Thiruvengada Mudali Street, Periamet, Madras. 3. Printed by J. A. SILVIA at the "LIBERATOR" Press 2-11, Mount Road, Madras 2.
Jt: Editor; PIVIAR.